OFFICE OF THE REGISTRAR
2 AUG 1928
MADRAS

உ

சிவமயம்.

துர்க்கை அம்மன் ஒயில் கும்மி.

கடலூர் ஜமீன் ஆதனூர் கிராமம் மந்திரிக்கோன் பட்டி
பெருமாள் கோனர் மகன் நீலமேகக்கோனர்
கேட்டுக்கொண்டபடி
கடலூர் ஜமீன் மாவத்தூர் கிராமம் கர்னம்
பசுபதிலிங்கம் பிள்ளை குமாரர்

இராமலிங்கம்பிள்ளை அவர்கள்

பாடியது,

" கரூர் விவேகபானு, பிரசில் "
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928. [அணா 1

உ

சிவமயம்.

துர்க்கையம்மன் கும்மி.

வெண்பா.

வையகமெலாங் கருணைபுரி முத்தய்யன் மலசைநாட்டில்
செய்யபுகழ் தளைத்தோங்கு பாளைமேட்டதனில் சிறந்துவாழும்
தையலம்பிகை வாலைதுர்க்கைமீதிற் கும்மி சாற்றிடத் தும்பி
கையோன் கணபதி பொற்றுளிணைகள் காப்புத்தானே.

கும்மி.

பாளைமாமேட்டு நகர்தன்னி லமர்ந்திட்ட
வாலை துர்க்கைமீதிற் கும்மிசொல்ல
ஆலவிஷமுண்ட ஈசனருளிய
ஆனைமுகவனே முன்னடவாய் 1

சத்திகங்காளி தயாபரி துர்க்கைமேல்
பத்தியுடன் கும்மி பாட்டுரைக்க
சத்துரு சங்கார வேல்முருகர் பதம்
எத்தேச் காலமும் காப்பாமே 2

பாரெங்கும் மெச்சிய துர்க்கையம்மன் மீது
பாங்குடனே கும்மிப் பாட்டுரைக்க
ஈரேழுலகும் தானே படைத்ததோர்
ஜெகதீஸ்வரி யுன்பாதம் காப்பாமே 3

துஷ்டரைக் கண்டித்து யிஷ்டரைக் கார்க்கவே
நாட்டஞ்செய்தே யிந்த லோகமெல்லாம்
அஷ்டலெட்சுமியை மார்பினில் வைத்தருள்
ஆதிநாராயணர் காப்பாமே 4

வாலைமெஞ்ஞான சரஸ்வதியே யெந்தன்
வாக்கிலென்னாளும் குடியிருந்து
பாலன்சொல் கும்மிக்கி யாதொரு குற்றங்கள்
நேராமல் யாவரும் கேழ்க்கவேதான் 5

மெச்சிய விக்கிரமாதித்தற்கு முன்னாள்
வேண்டுவரங்கள் கொடுத்தருளி
பட்சம்வைத்துக் காத்து ரெட்சித்தருள்தந்த
உச்சினி மாகாளி மாதாவே 6

இந்த கலியுகம் நாலாயிரத்தி தொளாயிரத்தி
தொண்ணூத்தி நாலு தன்னிலே
நந்தனவருஷம் ரிஷபமாதம்
நாளொரு மூன்று தேதியிலே 7

சிந்தையில் வந்தருள் காட்டுதுர்க்கைமீதில்
இந்தனற் கும்மியைப் பாடலுற்றேன்
எத்தனைபிழை யிருந்தாலும் பெரியோர்கள்
எந்தன்மீதில் குற்றம் சொல்லாமல் 8

காசினியிலெங்கும் பேர்விளங்கிய
கருணகிரிநாதன் தன்கிருபை
நேசமெப்போதும் அகலாமல் நிற்கும்
நின்னன்புக் குரியவர் தீரனை 9

கங்கைகுலத்தில் வளரும் பசுபதி
லிங்கமருளிய தன்பாலன்
இங்கிதமாகவே ராமலிங்கஞ் சொல்கும்மி
சிங்காரமாகவே கேட்டருள்வீர் 10

ஆதியில் பாலமேட்டு நகர்தனில்
துர்க்கை வந்து அமர்ந்தகதை
நீதியுடன் சொல்ல கேட்டருளிந்த
நீணிலத்துள்ள மானிடரே 11

ஆதிநாராயணர் வாழுமந்த மலை
அடிவாரம் தன்னில் குடியிருந்தான்
சாதியில் பூவசிய குலத்தானென்னும்
அன்னதானி யென்னும் காராளன் 12

இதிலிருந்து முதல்க்குடி யாய்வந்து
தென்ஜில்லாவைநோக்கி சிந்தைநொந்து
வாடியேமெத்த வருத்தமுட னெங்கே
ஓடியே யெங்கே பிளைப்போமென்று 13

பாடுபட்டு சுகமில்லையென்று மெத்த
பலர்பேற்றைச் சேர்த்துக் கூட்டிக் கொண்டு
நாடுவிட்டு தெற்குநாடுகள் சென்று
நாமும்பிழைத்திட வேணுமென்று 14
காவேரியாற்றுக்கு தென்பாதியங்கே
கடலூர்சீமைக்கி போவமென்று
நீர்புறமாகவே வந்து மதுக்கறை
செல்லாண்டியம்மனைப் போற்றிசெய்து 15
மெத்தவருத்த முடனங்கே யன்னதானி
பாலமேட்டுநகர் தன்னில்வந்தான்
சுத்தியேபனைமா மரத்தடியிலங்கே
துர்க்கையும்வந்து யமர்ந்தாள்காண் 16
ஆவேசமாகவே தீவந்து முன்விழ
ஆவேசம் வந்துதே வந்தவனும்
ஓகோயிதுவென்ன சிவனேயிந்த
ஊர்தனில் யாருடன் சொல்வேனென் 17
உற்றாரொருவருந் தானுமில்லையிந்த
ஊர்களில்யாவரும் பழக்கமில்லை
கர்த்தாவேயுன்செய லென்றுசொல்லி மனங்
கலங்கியே பாலன் தெளிவாகி 18
தாயேபராசக்தி வாலைதுர்க்கை யென்னை
தற்காத்து ரெட்சிக்க வேணுமென்று
பூவசியனவ னன்னதானி யன்னேரம்
மேட்டுநகர்தனில் வாழ்ந்திருந்தான் 19
இவ்விதமிருக்கையில் துர்க்கையு மிந்தக்கிராமத்தில்
என்னென்ன சோதனை காட்டலுற்றாள்
சர்ப்பனையாகவே ஆதனூர் கிராமத்தில்
தலைமையான குடிகளுக்கும் 20
பால்கலயங்க ளுடைவதும் வீட்டினில்
பந்துபோலக்கினி வீழ்வதுவும்
ஆலமிடும் தொட்டியில் பிள்ளைகளும் மிப்படி
ஆடுமாடுநஷ்ட மாவதுவும் 21

நாலாவிதத்திலும் துன்பங்கள் வந்துதே
நாராயணன்செய லென்றேதான்
காலமேபொல்லாக் காலநமக்கென்று
கலங்கியே பாலன் குடிகளெல்லாம் 22

கூடியேகுறிகள் கேட்கும்போது துர்க்கை
குறையென்று சொல்லவே தான்தெரிந்தான்
யாவரும் கூடியே கடலூர் சமஸ்தானம்
அரன்மனைக்கிப்போய் முறையிடவே 23

காவலான கருணைகிரி முத்தய்யன்
காண்டீபன் கேட்டுமே யேதுசொல்வார்
யாவரும் ஒன்றுக்கும் அஞ்சவேண்டா முங்கள்
ஆருததுன்பத்தை தீர்ப்போமென்றே 24

பூவசியனுன யன்னதானி தன்னை
சேவுகனாலே வறவழைத்து
சோதினைகேள்விகள் கேட்டபடியெல்லாம்
சொல்லவுந் தாட்டீக முண்டாகி 25

ஆதனூர்க்கிராமம் குடிகள் யெல்லாரையும்
அன்புடன் பார்த்தவ ரேதுசொல்வார்
மேட்டுநகர்தனில் துர்க்கை நிலைநாட்டி
வீட்டுக்கோர் பொங்கல் தவராமல் 26

ஆட்டுக்கிடாவும் பெலியிடுங்களென்று
அன்புட னுத்திரவு தான்கொடுத்தார்
மாட்டுப்பெலிக்கு சொந்தமாக வொரு
மானிடர் சென்று தான்கொடுத்தார் 27

கூட்டஜனத்துடன் நகரச் சேவுகர்
கூடவேபோவென்று யனுப்பிவிட்டார்
மெத்தவும்நேசமாய் குடிகளெல்லோரும்
மேட்டுநகர்தனில் கூட்டமிட்டு 28

சுத்துகிராமத்தி லுள்ளபெரியோர்கள்
சொந்தஉறன்முறை கூட்டமுடன்
செம்பிநத்தங்கிராம குடிகளெல்லோரும்
சேறவேவந்து கூடியேதான் 29

அன்புடனே பாளைத்தோப்புக்குள் யாவரும்
அன்னதானியுடன் வந்துநின்று
ஜாதியாரி லெல்லா சாதிகளுமங்கே
சப்தமேகங்கள்போல் நிறைந்துநிற்க 30

ஆதிபெரியணன் மாரப்பன் யோறலி
யானைக்குட்டி னல்வர்கள் முன்நிற்க
மானிலமெங்கும் விளங்கும்பராசக்தி
வாலையைநெஞ்சில் தியானம்செய்து 31

அன்னதானிமீதி லாவேசம்வந்தது
ஆங்காரமாய்வெகு டீங்காரமாய்
சொன்னசொல் மாராமல் பாளையப்பட்டினில்
துர்க்கையம்மனை நிலைநாட்டி 32

முன்னடியானையும் முனியப்பனையும்
சன்னிதிக்குமுன்னே நிலைநாட்டி
இன்னிலைமெச்சிடு வைரவனையும்
ஈசானியபக்கத்தில் நிலைநாட்டி 33

பச்சைபந்தலிட்டு வாழைகரும்புகள்
பாங்குடனேமுன்னே நாட்டியேதான்
உச்சிதமாகவே தோரணங்கள்கட்டி
உகந்துபூச்சரம் தொங்கலிட்டு 34

சங்கீதமேளங்கள் தானுமுழங்கிட
தாதிவெண்சாமரை வீசிநிற்க
இங்கிதமான கவிராயரெல்லாம்
ஏகமாய்நின்று கவிபாட 35

வேதபிராமணர் புண்ணியாவசனம்
வேதங்களோமாக் கினிகள்செய்ய
பூலோகமெல்லாம் விளங்கு நவக்கிரக
பூசைகும்பாபி ஷேகம்செய்து 36

சித்தாடை தங்கப்பணிகள் பொன்னுடைகள்
முத்துப்பதித்த பொற்சறடுகளும்
காரைபொட்டுப்பட்டக் காரைமூக்குத்தி
கன்னடக்கம் நெத்திப்பட்டங்களும் 37

முல்லையிருவாச்சி செந்தாமரையுடன்
ரோஜாமலர் திண்டாரம்செய்து
வாசல்தன்னிற்பக்கப் பிரகாசமாகவே
இரண்டுகுதிரைகள் செய்துவைத்து 38

பிரபலமான யிரண்டு சிங்கங்கள்
பார்புகழவே செய்துவைத்து
சூலமும்வேலும் சன்னிதிக்குமுன்னால்
கொல்லனால்செய்து முன்னேவைத்து 39

காலன்யெருமை கிடாவைவெட்டிடும்
கருக்கான்வீச் சருவாளுஞ்செய்து
பட்சமொன்று கெடுவைத்துக்காபபு
பாங்குடனேயம்பாள் வயிரவருக்கும் 40

இன்னியல்மெச்சு மன்னதாணி கிடாவெட்டி
மேதினியில் ஆதிகாணியாளன்
சங்கமானதலையாரி காளிக்காரத்தோட்டி
சகலருமங்கள வாரந்தன்னில் 41

சிங்காரமாகவே காப்புகள்கட்டியே
செவ்வாய் பதினைந்துநாள்கெடுவில்
சன்னிதிக்கிநேரில் உன்னிதமாகவே
தச்சனால்ரதம் செய்துவைத்து 42

வாணங்களாகவே மாத்துச்சலவைகள்
கண்ணாடிதூக்கமும் கட்டியேதான்
அரகராயென்றுதான் கரகத்தைச்சோடித்து
அஸ்வத்தின்மீதி லேற்றிவைத்து 43

விரைவுடனேயம்பாள் முன்பாகவேவைத்து
மெத்தயபிடேகம் செய்துவப்பால்
அரமனைப்பொங்கலும் வைத்துகிடாவெட்டி
அபிடேகம்செய்தபின் காணியாளன் 44

பெருமையுடனேதான் பொங்கல்கள்வைத்து
பெலியிட்டு யபிடேகம் தானுஞ்செய்தான்
புதவாரந்தன்னில் மேதியின்குழிவெட்ட
பிரியமாய் யெல்லோரும் கூட்டமிட்டு 45

வெளியான ஈசான்யபக்கந் தனில்குழி
வெட்டினர் பள்ளர்கள் திட்டமுடன்
பொங்கல்கள்வைத்து கிடாவெட்டிபலியிட்டு
சிங்காரதீபார்த்தி தந்தார்கள் 46

ஆதிசமஸ்தானம் கருணைகிரிமுத்தய்யன்
அரன்மனைகிடாவும் முதற்பலிதான்
நீதியுடனே காணியாள னென்று
இரண்டாவதுபலி தான்கொடுத்தான் 47

மூன்றுநாள்தன்னில் காப்புகள் அவிழ்த்து
குழிமூடி யபிடேகஞ் செய்துவைத்து
பரிவட்டம்கட்டியே மாலைகள்சந்தனம்
பாக்கிலைபிரசாதம் தான்கொடுத்து 48

அன்றிரவு சின்னமேளத்துடன் தாசி
சதுரங்கம் வாழி பாடிட்டே
விரைவுட னெல்லோரும் அரண்மனைக்கிபோய்
விபூதிப்பிரசாதம் தான்கொடுத்தார் 49

சிந்தைமகிழ்ந்து அடிபணிந்தெல்லோரும்
திருவாக்குப்பெற்று மகிழ்ச்சியுடன்
சந்தோஷமாகவே குடிகளெல்லோரும்
வந்துசுகமுடன் வாழ்ந்திருந்தார் 50

மாதம்மும்மாரி தவராமல் பெய்து
மானிடரெல்லோரும் க்ஷேமமுடன்
பேதமில்லாமலே யெல்லோரும் களிப்புற்று
நேசமதாகவே வாழ்ந்திருந்தா 51

வாழி.

ஆனைமாமுகத்தோன்வாழி ஆவினன்குடியோன்வாழி
மான்மழுதரித்தோன்வாழி மான்விழியுமையாள்வாழி
வானிலத்தவர்கள்வாழி வளமிகு துர்க்கைவாழி
நானிலத்தெவருங்கும்மி நவின்றிடக் கேட்போர்வாழி.

முற்றிற்று.